Nov 10, 2012

தினகரன்

# பெங்களூர் ரியல்எஸ்டேட்டில் டோனி ஆஷய்

பெங்களூர், நவ.10: பிரபல கட்டிட கலைஞர் டோனி ஆஷய் பெங்களூரில் 2 ரியல்எஸ்டேட் திட்டங்களை துவக்குகிறார்.

உலகளவில் பிரபலமான கட்டிட கலைஞர் டோனி ஆஷய். நடிகர் ஆமிர்கான், ரிலையன்ஸ் அம்பானி வீடுகளை வடிவமைத்தவர். இவர் இந்தியாவில் முதன் முறையாக 2ரியல்எஸ்டேட் திட்டங்களை துவக்குகிறார். இரண்டும் பெங்களூரில் அமையவுள்ளன.

கார்னித், திஅவென்யூ என்ற பெயரில் துவக்கப்படும் இத்திட்டங்களை ஈஸி க்ரூப்புடன் இணைந்து ஆஷய் நடத்தவுள்ளார். சதுரஅடி ரூ.7ஆயிரம் வரை இத்திட்டங்களில் வீடுகள் விற்கப்படும். இதற்கான ஒப்பந்தம் ஈஸி க்ரூப் மற்றும் ஆஷயின் ஆஷய்டி சைன் கார்ப்பரேஷன்இடையே நேற்று செய்யப்பட்டது.




பிரபல கட்டிட கலைஞர் டோனிஆஷய் பெங்களூரில் ரியல்எஸ்டேட் துறையில் இறங்குகிறார். நேற்று ஈஸி க்ரூப் நிர்வாகிகள் ஹிசம் சயித், அனில் ஆகியோருடன் இதற்காக ஒப்பந்தம் செய்துகொண்டார்.

EZZY GROUP